மாலை முரசு

பக்கங்கள் 20+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை 20.04.2025 | அதிர்வு 260

பிரதமரின் வருகைக்காக

## பல பிரதேசங்களுக்கு மின்சாரம் துண்டிப்பு

**மக்கள் கடும் விசனம்**

(கி.வசந்தன்)



தேர்தல் பிரச்சாரத்துக் காக நெடுங்கேணிக்கு இன்று பிரதமர் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை சி.ஐ.டியினரிடம் இன்று சமர்ப்பிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள்தொடர்பானஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியின் பணிப்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்இறுதிஅறிக்கை மற்றும் ஆவணங்கள் அடங்கிய தொகுதிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் இன்று ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்தவுடன், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் துரிதமாகவும் புதிய திசையிலும் முன்னெடுக்கப்பட்டன. 02▶


# சாட்சி வழங்க அஞ்சியவர்கள் சாட்சி வழங்க ஆரம்பித்துள்ளனர்

**ஜனாதிபதி அநுர தெரிவிப்பு**

“மிக முக்கிய விசாரணை சம்பவம் தொடர்பில் இதுவரை மௌனம் காத்து வந்தவர்கள் தற்போது வாய் திறக்க ஆரம்பித்துள்ளனர். சாட்சி வழங்குவதற்கு அச்சப்பட்டவர்களும் சாட்சி வழங்கி வருகின்றனர். எனவே, விசாரணைகளை மிகவும் சூட்சுமமாக நடத்த வேண்டியுள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் சம்பவத்துக்குப் பொறுப்புகூறவேண்டிய குழுவின் பெயர் விவரம், ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்று 02▶



# பருத்தித்துறையில் மூதாட்டி ஒருவர் அடித்துக்கொலை!



## அயல் வீட்டு இளைஞர் கைது

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். பருத்தித்துறை – தும்பளை யில் மூதாட்டி ஒருவர் பொல்லினால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜே/404 தும்பளை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாம்பிரம்பற்றை வீதி, தும்பளையில் சகோதரியுடன் வசித்து வந்த செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி குணதேவி (வயது – 69) என்ற மூதாட்டியே இதன்போது உயிரிழந்துள்ளார்.

வீட்டில் திருடும் நோக்குடன் சென்ற இளைஞரே மூதாட்டியைத் தாக்கிப் படுகொலை செய்துள்ளார். மேற்படி இளைஞர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டில் சகோதரிகளான இரண்டு மூதாட்டிகள் வசித்து வருகின்றனர். அதில் ஒருவர் இன்று காலை உயிர்த்த ஞாயிறு பிரார்த்தனைக் காகத் தேவாலயத்துக்குச் சென்றுள்ளார். மற்றையவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

அந்நிலையில் இரண்டு மூதாட்டிகளும் தேவாலயத்துக்குச் சென்றுள்ளார்கள் என நினைத்து, அயல் வீட்டு இளைஞர் வீட்டினுள் களவுக்குச் சென்றுள்ளார்.

அவ்வேளை வீட்டில் இருந்த மூதாட்டி இளைஞர் களவில் ஈடுபடுவதனை அவதானித்ததை அடுத்து இளைஞர் பொல்லினால் மூதாட்டியைத் தலையில் பலமாகத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

தேவாலயத்துக்குச் சென்ற மற்றைய மூதாட்டி வீட்டுக்கு வந்த போது மூதாட்டி இரத்த வெள்ளத்தில் சடலமாகக் காணப்பட்டதனை அவதானித்து அயலவர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அயல் வீட்டு இளைஞரை தும்பளை, மணல் ஒழுங்கையில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர், கொலைக் குற்றத்தை ஏற்றுக் கொண்டு வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில், பருத்தித்துறை பொலிஸார் அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பல பிரதேசங்களுக்கு...

ஹரிணி அமரசூரிய வருகை தந்திருந்த நிலையில் பட்டிக்குடியிருப்பு மற்றும் ஒலுமடு பிரதேசங்களுக்கான மின் விநியோக மார்க்கங்களில் மின் துண்டிக்கப்பட்டது என்று பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

பிரதமரின் வருகைக்காக அமைக்கப் பட்டிருந்த மேடைப் பகுதியில் பாதுகாப்பு காரணங்களுக்காகப் பொருத்தப்பட்ட கருவிகளுக்கும் மற்றும் குறித்த பிரதேசத்தில் மின்சாரம் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகவுமே பட்டிக்குடியிருப்பு, மாராஇலுப்பை, ஒலுமடு போன்ற பிரதேசங்களுக்கான மின்சார விநியோக மார்க்கங்கள் துண்டிக்கப்பட்டு நெடுங்கேணி நகர மத்திக்கு மாத்திரம் மின்சாரம் வழங்கப்பட்டது என்றும் பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

இந்தச் செயற்பாட்டில் பொலிஸார் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

இது தொடர்பில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளினால் தேர்தல் முறைப் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக மின்சார சபையின் முறைப்பாட்டுப் பிரிவினரோடு தொடர்பு கொண்டு கேட்டபோது,

“நெடுங்கேணி பிரதேசத்தின் உயர் மின் மார்க்கத்தில் தென்னை மரத்தின் ஓலை ஒன்று அழுத்திய நிலையில் காணப்பட்டமையினால் குறித்த பிரதேசங்களுக்கான மின்சாரம் இடையிடையே துண்டிக்கப்பட்டு வருவதாகக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், இந்தப் பிரதேசத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டு அதனைச் சீர்செய்தமையே இந்த மின் துண்டிப்புக்கான காரணம்.” – என்றனர்.

### ஜனாதிபதி...

அதன்படி, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களின் 6 ஆம் ஆண்டு நிறைவில், இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை அரசு உறுதி செய்துள்ளது.

இந்தக் குற்றத்தை கால ஓட்டத்தில் மறைந்து விடாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்று உத்தரவாதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கியுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டில் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தற்கொலைத் தாக்குதல்களில் 260 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சாட்சி வழங்க...

ஜனாதிபதி கடந்த 30 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

எனவே, உயிர்த்த ஞாயிறுக்கு முன்னதாக மேற்படி தகவல்களை ஜனாதிபதி வெளியிடுவார் என முழு நாடும் எதிர்பார்த்தக்கொண்டிருந்த நிலையிலேயே, பதுளையில் நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தின்போது, தற்போது தகவல்களை வெளியிட முடியாது என்ற தொனியில் ஜனாதிபதி உரையாற்றினார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

“முழு நாடே எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சம்பவம் (உயிர்த்த ஞாயிறு தாக்குதல்) தொடர்பான விசாரணை இடம்பெற்று வருகின்றது.

விசாரணையின் அடுத்த கட்டத்தை மிகவும் அவதானத்துடனும், சூட்சுமமாகவும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே, சில விடயங்களை உங்களால் தற்போதே அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விசாரணைகள் சிறப்பாக இடம்பெறுகின்றன என்ற உத்தரவாதத்தை உங்களுக்கு வழங்க முடியும். இதுவரை வாய் திறக்காதவர்கள், வாய் திறக்க ஆரம்பித்துள்ளனர். சாட்சி வழங்குவதற்கு அச்சப்பட்டவர்கள், சாட்சி வழங்கி வருகின்றனர்.

தொடர்பு இல்லை எனக் கூறியவர்களின் தொடர்புகள் வெளிவந்த வண்ணமுள்ளன. எனவே, விசாரணை சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. குற்றங்களை காலத்தால் மூடிமறைக்க இடமளிக்க மாட்டோம். உரிய வகையில் நீதி நிலைநாட்டப்படும்.” – என்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் என ஜனாதிபதி வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், அதனை மையப் படுத்தியதாகவே மேற்படி கருத்துக்களை அவர் வெளியிட்டார் என்பதை அறியமுடிகின்றது.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

## பெண் உட்பட இருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து கேகாலையில் மாவனெல்லை - ஹெம்மாத்தகம வீதியில் இடம்பெற்றுள்ளது என்று மாவனெல்லை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த நாய் மீது மோதி கவிழ்ந்து பெண் பாதசாரி மீது மோதி பின்னர் அருகிலிருந்த கொங்கிரீட் கல்லில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரும் வீதியில் பயணித்த பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் - ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சியம்பலாவ பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஹொரவ்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று ஹொரவ்பொத்தானை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி நபர் வீட்டில் இருந்து வெளியே சென்றபோது வீட்டுக்கு முன்பாக நின்று கொண்டிருந்த காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் கல்முனை மக்களுக்கு உதவி வழங்கல்!

(எம்.என்.எம்.அப்ராஸ்)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹீம் உல் அசீஸ் கல்முனைக்கு நேற்று (19) விஜயம் செய்தார்.

முன்னாள் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள், இளைஞர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பொருளாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் நேற்று கல்முனையில் இடம்பெற்றது.

ரஹ்மத் மன்சூர், பாகிஸ்தான் தூதுவரிடம் வேண்டிக்கொண்டதற்கு இணங்க, பாகிஸ்தான் தூதரகத்தின் ஏற்பாட்டில் உதவித் திட்டங்களை பாகிஸ்தானிய தூதுவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹீம் உல் அசீஸ் கல்முனைக்கு விஜயம் வழங்கி வைத்தார்.

அதிதிகளான பாகிஸ்தானிய தூதரக இலங்கைக்கான ஆலோசகர் நுஃமான் ரஷீட் ஹயானி, சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ. எம்.ஜௌபர், கல்முனை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜெய்ஸான் மற்றும் பவுண்டேசன் உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் ஒரு நாடகம்?

நிர்ப்பந்த சூழல்கள்தான் பல சமயங்களில் காரியங்களை ஆற்றுவதற்கு - செயல்களைச் செய்வதற்கு - தூண்டுகின்றன அல்லது கட்டாயப்படுத்துகின்றன.

இலங்கையில் கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகக் கொடூரமானது, மிருகத்தனமானது, காட்டுமிராண்டித்தனமானது, மனித குல நாகரிகத்திற்கு ஒவ்வாதது என்றெல்லாம் கூறப்பட்ட போது அதை ஏற்றுக் கொண்ட இலங்கை அரசுகள், அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கான ஏற்பாடுகளை முழுமையாக நிறைவு செய்யாமல் இழுத்தடித்து வந்தன.

இந்தக் குரூரச்சட்டத்தை இல்லாமலாக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவற்றை நிறைவு செய்வதற்கான - முழுமையாக பூர்த்தி அடைய வைப்பதற்கான - நடவடிக்கைகளை இலங்கையின் எந்த அரசும் முழுமூச்சுடன் முன்னெடுக்கவில்லை.

அதனால் இலங்கையில் யுத்தம் முடிந்து இந்த 15 ஆண்டு காலத்தில் இந்தச்சட்டத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என அவ்வப்போது பாவனை காட்டப்பட்டதே தவிர, அது உண்மையில் ரத்து செய்யப்படவில்லை. இப்போது அதை இல்லாமல் ஒழிக்க வேண்டிய கட்டாயம் - நிர்ப்பந்தம் - இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் அமெரிக்கா அறிவித்திருக்கும் பரஸ்பர வரி உயர்வு காரணமாக இலங்கை மோசமான பொருளாதார பின்னடைவுகளை எதிர்கொள்ளும் ஆபத்து நேர்ந்துள்ளது. ஏற்கனவே மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்திருக்கும் இலங்கைக்கு அமெரிக்க வரி உயர்வுப் பிரச்சினைக்கு அப்பால் இப்போது பெரும் சலுகையாக கிடைத்துவரும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி வரிச் சலுகையான ஜி.எஸ்.பி. பிளஸ்ூம் பறிபோகும் ஆபத்து நெருக்கடியாக வந்திருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமைகளை மதிக்கும் ஆட்சி நிர்வாகம் இல்லை என்ற காரணத்தைக் காட்டி இந்த வரிசலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தி இருந்தது. ஆயினும் 2015 இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு, ஐரோப்பிய ஒன்றியத்தின் கைகளில், கால்களில் விழுந்து அந்த வரிச்சலுகையை 2017 மீளப் பெற்றுக் கொண்டது. அப்படிப் பெறும் போது இலங்கையில் கொடூரச் சட்டமாக நீடிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அடியோடு நீக்குவோம் என்று இலங்கை உறுதிமொழி கொடுத்தது. அதற்கு அமைய அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று பாசாங்கு செய்யப்பட்டது. ஆனால் சட்டம் ரத்து செய்யப்படாமல் தொடர்கிறது. தற்காலிக ஏற்பாடுகள் என்ற பெயரில் 47 ஆண்டுகள் கழித்தும் மனித நாகரிகத்திற்கு ஒவ்வாத இந்தச் சட்டம் இலங்கையில் நீடிக்கின்றது.

இப்போது, இலங்கைக்கு இந்த வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய கால அவகாசம் அடுத்த வருடத்துடன் முடிகின்றது. அதைத் தொடர்வதா என்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியக் குழு ஒன்று அடுத்த மாதம் கொழும்பு வருகின்றது.

அதற்கிடையில் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாவனை பண்ணும் வேலையை இலங்கை அரசு ஆரம்பித்து விட்டது. ஏற்கனவே சர்ச்சைக்குரியதான இணையப் பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி உள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்து, பயங்கரவாதம் அல்லது அமைதியின்மை இல்லாத நிலையான சூழலை இலங்கை பேண வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்க்கின்றது. அத்தகைய நிபந்தனை கடைப்பிடிக்கப்பட்டால் வரி சலுகைகள் இலங்கைக்குத் தொடர்ந்து கிட்டுவதை ஐரோப்பிய ஒன்றியம் ஆதரிக்கும் என்று பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் அணில் ஜயந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அதற்காக - ஐரோப்பிய ஒன்றிய ஏற்றுமதி வரிச்சலுகை தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக - ஒரு தீர்க்கமான மாற்றமாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விரைவாக ரத்து செய்ய அரசாங்கம் தயாராகி வருகின்றது என்று அவர் தரப்பில் இருந்து தகவல் வந்திருக்கின்றது.

கட்டாயங்கள் - நெருக்குவாரங்கள் - வந்தால்தான்காரியங்கள்ஆற்றப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் இம்முறையும் இந்த முயற்சி காதில் பூச்சுற்றும் நாடகமாகவே முடியும் என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர்

(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் கலாநிதி ஹிரிணி அமரசூரியவின் பங்கேற்புடன் ஈரப் பெரியகுளத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் இன்று நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய பங்கேற்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தேசிய மக்கள் சக்தியின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வேட்பாளர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE



# வவுனியா உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் “சங்கு” கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு

**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு இன்று நடைபெற்றது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளர் நாயகமுமான ந.சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் வவுனியா மாநகர சபை உட்பட நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலாே அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், புளாெட் அமைப்பின் பிரதிநிகள், ஜனநாயகப் பாரோளிகள் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## வவுனியா – மகாறம்பைக்குளத்தில் இன்று தமிழரசின் தேர்தல் அலுவலகம் திறப்பு!

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் வவுனியா – மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் இன்று திறந்துவைக்கப்பட்டது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட மகாறம்பைக்குளம் வட்டாரத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக சி.சந்திரசேகரம் நேரடி வேட்பாளராகப் போட்டியிடுவதுடன், பா.ஆனந், ரா.நித்தியா ஆகியோர் பட்டியல் வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர்.

அவர்களது பிரதேச தேர்தல் அலுவலகம் மகாறம்பைக்குளம் பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய ஒரு சபையாக காரைவு பிரதேச சபையை மாற்றி அமைப்போம்!

## *ஐக்கிய சமாதான கூட்டமைப்பு தெரிவிப்பு*

(றிபாஸ்)

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியில் காரைதீவு பிரதேச சபை மாளிகைக் காடு கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடும் தானிஷ் ரஹ்மதுல்லாஹ்வின் அரசியல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவரும், தொழிலதிபருமான கலாநிதி ஹக்கீம் செரீப் பிரதம அதிதியா கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதி உரையாற்றுகையில்,

2025 ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கொழும்பு, கொலன்னாவ, கொட்டிகாவத்தை, புத்தளம், கல்பிட்டி, ஆனடுவ, ஆராய்ச்சிகட்டு ஆகிய பகுதிகளில் போட்டியிடுவதுடன் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேசத்திலும் போட்டிடுகின்றது.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு அதிகமான ஆசனங்களை பெற்று ஊழலற்ற ஆட்சி ஒன்றை அமைப்பதுடன் பிரதேச சபைகளின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஏழை எளிய மக்களின் வாழ்வாதார திட்டங்களை கட்டியெப்புதல், சகல இன மக்களுக்கும் பாரபட்சமின்றி அபிவிருத்திகளை செய்தல் மாத்திரமல்ல காரைதீவு பிரதேச சபை இரு சமூகம் சார்ந்த ஒரு பிரதேச சபையாக இருப்பதனால் ஐக்கிய சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ள முடியும்.– என்றார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





## தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கிண்ணியா நகர சபைக்கு பிரசாரம்

(எச்.எம் ஹலால்தீன்)

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கிண்ணியா நகர சபைக்கு, கிண்ணியா வட்டாரத்தில் போட்டியிடும் எஸ். நியாஸ்ஸின் தேர்தல் பிரசாரமும் மக்கள் சந்திப்பும் கிண்ணியாவில் இடம் பெற்றது.

மக்களை சந்தித்த பின் ஊடகங்க ளுக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போது,

கிண்ணியா நகர சபையை சிறந்த தொரு சபையாக மாற்றுவேன். கடந்த காலங்களில் வேட்பாளர்கள் பொய் சொல்லி உங்களிடம் வாக்கெடுத்து பின் அவர்கள் வாக்குறுதியை மறந்து விட்டார்கள். அவ்வாறான ஒரு நிலை இனிமேல் ஏற்படக் கூடாது என்பதற் காகவே நான் போட்டியிடுகின்றேன்.

எமது அரசு ஆட்சியில் இருக்கிறபடி யால் நகர சபைக்கு உட்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட அனைத்து சேவைகளை யும் செய்வேன்.

நகர சபைக்கு அப்பால் சென்று பல கோரிக்கைகளை நகர சபையின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதிபதி யின் கையில் நேரடியாகக் கொடுப்பேன்.

நீங்கள் உங்கள் வாக்குகளை எதிர்க்கட்சிக்கு வழங்குவதால் எந்த ஒரு பயனும் கிடையாது.

எமது கட்சிக்குப் வழங்குவதன் மூலம் நகர சபைக்கான சரியான தீர்வைப் பெற்றுக் கொடுத்து அதனை நான் சரியான அபிவிருத்தியை காணச் செய்வேன்.

இந்தப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வளங்களையும் பயன்படுத் திச் சரியான கட்டமைப்பைக் கொண்டு சிறு வீதி அபிவிருத்தி, விளையாட்டு கழக அபிவிருத்தி, பெண்களுக்கான சிறு தொழில் வாய்ப்பு, வடிகான் பிரச் சினை, மழை காலங்களில் மழை நீர் தேங்கி நிற்கும் பிரச்சினை ஆகியவற் றுக்குச் சரியான தீர்வைப் பெற்றுத் தருவேன்.

எனக்கு வழங்கப்படும் வாக்குகள் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஏமாற்றம் இல்லாமல் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

அதற்காகத்தான் எமது அரசு இன்று ஆட்சியில் இருக்கின்றது. அதன் மூல மாக எமது அபிவிருத்திகளை இந்த நகர சபையில் நான் செய்து தருவேன்.- என்றார்.

## கற்பிட்டி அபிவிருத்தியின் முக்கிய பங்காளியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிலைத்து நிற்கும்

### கற்பிட்டி பிரதேச சபையின் தலைமை வேட்பாளர் முஸம்மில்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அன்று தொடக்கம் கற்பிட்டி நகரின் அபிவிருத்தியில் பெரும் பங்காற் றியுள்ளது என்று கற்பிட்டி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வேட்பாளர் ஏ. ஆர்.எம். முஸம்மில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கற்பிட்டி வைத்தியசாலைக்கான ஐந்து மாடி கட்டிடம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளர் எம். எச். எம். ஹில்மியின் வேண்டுகோளின் பெயரில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் உயர் பீட உறுப்பி னருமான எஸ். எச். எம். நியாஸ் முயற்சி யின் ஊடாக முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த முஸ்லிம் காங்கிர ஸின் பைசல் காசிம் மூலம்



வழங்கப்பட்டது.

கற்பிட்டியில் நீதிமன்ற செயற்பாடுக ளுக்கான நிரந்தர நீதிமன்றக் கட்டடத்தை முன்னாள் நீதி அமைச்சராக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்கி வைத் தார்.

அத்தோடு கற்பிட்டி பொது விளை யாட்டு மைதானத்தின் தேவைப்பாடு காணப்பட்ட நிலையில் தனியாரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த இடத்தை நீதிமன்றம்வரை சென்று பொது மக்க ளுக்குப் பெற்றுக் கொடுத்ததில் முக்கிய பங்கு வகித்தவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை உறுப்பின ருமான எஸ்.எச்.எம். நியாஸ் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவிக்கிறோம்.

இந்த முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குதன் மூலம் கற்பிட்டியின் அபிவிருத்தி மேலோங்கி நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE





## தமிழரசின் ஒட்டுசுட்டான் வேட்பாளர் ரவிகரன் எம்.பியுடன் சந்திப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேசக் கிளைக்கு உட்பட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பேசப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படும் ஐந்து உள்ளூர் அதிகார சபை வட்டாரங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆலோசனைகளும் இதன்போது வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

## நுவரெலியாவில் 12 சபைகளையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றும்!

### நுவரெலியா மாவட்ட எம்.பி. கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )



எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 சபைகளையும் கைபற்றி தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும். மோசடிகாரர்களுக்கும் வஞ்சகர்களுக்கும் ஒருபோதும் நுவரெலியா மாவட்ட மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஹட்டன் டிக்கோயா நகரசபை, நோர்வூட் பிரதேச சபை, கொட்டகலை, அக்கரபத்தனை, நுவரெலியா, மஸ்கெலியா ஆகிய சபைகளில் இதற்கு முன்னர் தலைவர்களாக இருந்தவர்கள் மக்கள் மத்தியில் சென்று இனவாதத்தை தூண்டி தங்களுடைய அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கான வேளைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நுவரெலியா மாவட்ட மக்கள் அனைத்து மாற்று கட்சிகளையும் புறந்தள்ளிவிட்டு தேசிய மக்கள் சக்தியின் வேலைத் திட்டங்களை கையில் எடுப்பதற்கு மக்கள் தயாராகியுள்ளனர்.

தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின மக்களுடைய வாக்குகளையும் பெற்றுக் கொண்டதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஷாநாயக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார் அதேபோல் மூன்றில் இரண்டு அதிகாரத்தை கொண்ட நாடாளுமன்றத்தை நாங்கள் அமைத்துக் காட்டி இருக்கின்றோம்.

நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் உள்ளூராட்சி சபைகளில் இருந்த தலைவர்கள் களவு பொய் போன்ற மோசடிகளில் ஈடுபட்டவர்கள். மக்கள் மத்தியில் சென்று சிங்கள தலைவர்கள் இனவாதத்தை தூண்டியதாக பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

சபைகளில் இருந்த முன்னாள் தலைவர்களுக்கு ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதுவரை காலமும் இங்குள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுத்ததில்லை. இவர்களால் செய்த ஒரே வேலைத் திட்டம் இங்குள்ள நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்குச் சொந்தமான இடங்களை பணத்துக்காக விற்பனை செய்துள்ளது மட்டுமே. அதுமட்டுமின்றி வெளிநபர்களுக்கும் இங்கு பல காணிகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

இனவாதத்திலும் மதவாதத்திலும் ஆட்சி செய்த காலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. நகர சபையில் காணப்படுகின்ற குப்பை பிரச்சினைகளுக்குக் கூட தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாதவர்களாகவே காணப்பட்டார்கள்.

மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காகவேதான் தேசிய மக்கள் சக்தி அரசு உருவாக்கப்பட்டுள்ளது. இனவாதத்தை தூண்டி வாக்கு கேட்பதை விட கடந்த காலங்களில் முன்னெடுத்த வேலைத் திட்டங்களைச் சுட்டிகாட்டி வாக்கு கேட்க வேண்டும். – என்றார்.



# உவர்மலை மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, உவர்மலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருவருள்மிகு பூலக்ஷ்மி மகாலக்ஷ்மி சமேத சமுத்ர ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று (20) சுபவேளையான காலை 9.37 மணிக்கு நடைபெற்றது.

பிரதான கும்பாபிஷேக கும்ப கலசங்கள் யானையில் செண்டை வாத்திய முழகத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரதான கோபுரம் மற்றும் கர்ப்பகிரக விமான கலசம் என்பவற்றுக்குக் கும்பநீர் சொரியப்பட்டது.

அதனை அடுத்து மூலவரான சமுத்திர ஸ்ரீ மகா விஷ்ணுவுக்கான கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.









# பூனப்பிட்டியில் உயிர்த்த ஞாயிறு திருப்பலி!

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் – பூனப்பிட்டி புனித சாந்த லூசியாள் தேவாலயத்தின் இயேசு நாதரின் உயிர்த்த ஞாயிறு தினமான இன்று காலை திருப்பலிப் பூஜைகள் இடம்பெற்றன. தேவாலயத்தின் பூஜைகளை கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு ஜோசப் ஜீஸஸ் அடிகளார் கலந்து கொண்டு நடத்தி வைத்தார்.





# மகப்பேற்று நிபுணர் தங்கவடிவேலின் சிலை பெரிய கல்லாற்றில் திறந்துவைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

பெரியகல்லாற்றின் பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் சீனித்தம்பி தங்கவடிவேலின் சிலையை அன்னாரின் சகோதரி மற்றும் பிரதம அதிதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரன் மற்றும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஞா.சஞ்ஜய் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

சிலை திறப்பை தொடர்ந்து அதற்கு பொருத்தமானதாக டாக்டர் சீனித்தம்பி தங்கவடிவேலுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மகப்பேற்று விடுதியும் புனரமைப்புச் செய்யப்பட்டு கடந்த ஏழு வருடங்களின் பின் திறந்து வைக்கப் பட்டது. பிரதம விருந்தினர் இந்த விடுதி பற்றி குறிப்பிடுகையில்,





தனியார் வைத்தியசாலையிலும் பார்க்க சிறப்பாக சகல முக்கிய அம்சங்களுடன் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

நிதியூட்டம் சுவிற்சலாந்தில் வதியும் சந்திரசேகரன் குடும்பத்தினரால் குடும்ப தலைவியின் நினைவாக செய்யப்பட்டது சிறப்பம்சமாகும். இத்தகைய கருமங்களே நின்று நிலைக்க கூடியவை. எனவே நன்கொடையாளர்கள் இதை முன் உதாரணமாக கொள்ள வேண்டும். நிதி துஷ்பிரயோகம் இடம் பெறாமல் முழுமையாக பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும்.

டாக்டர் சஞ்ஜேயைப் பொறுத்தவரையில் அவர்மீது கொண்ட நன்கொடையாளரின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இது சாத்தியமாயிற்று. குடும்பத் தலைவியின் நினைவாகக் கிராமத்துக்குச் செய்யும் ஒவ்வொரு விடயங்களும் வரலாற்றுப் பதிவுகளாக நிலைக்கவே செய்யும்.- என்றார்.







# ஹெட்டிபொல-தம்புள்ள குமாரஹல்ல வீதியில் பாலத்துள் வீழ்ந்தது லொறி!

**(உடப்பு க.மகாதேவன்)**

ஹெட்டிபொல-தம்புள்ள குமாரஹல்ல பிரதான வீதியில் பாலத்தின் அருகில் கோழிகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பாலத்துக்கு கீழே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இன்று (20) அதிகாலை3 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனக் குறைவு காரணமாகஇந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

லொறியில் பயணம் செய்த சாரதி மற்றும் இருவர் காயங்களுடன் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.








# திருமலை புனித மரியாள் பேராலயத்தில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனை!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவண அருட் கலாநிதி நோயல் கிரிஸ்டியன் இம்மானுவேல் ஆண்டகை தலைமை யில் சனிக்கிழமை நள்ளிரவு நடை பெற்றது.

கத்தோலிக்க பாரம்பரியத்தின்படி புனித சனி ஆராதனை என அழைக்கப்படும் இந்த நாளில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பைக் குறிக்கும் வகையில் புதிய நெருப்பு மற்றும் புனித நீர் ஆசீர்வதிக் கப்படுதல் ஆகிய சடங்குகளுடன் ஆராதனை நடைபெற்றது.





# மன்னாரில் உயிர்த்த ஞாயிறு பெருவிழா!









(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறை மாவட்டதில் பலத்த பாதுகாப்புகளின் மத்தியில் கத்தோலிக்க தேவாலயங்களில் கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி கொண் டாட்டங்கள் இடம்பெற்றன.

கத்தோலிக்க மக்களின் விசுவாசம் கிறிஸ்துவின் உயிர்ப்பே என்பதை திரு அவையானது நிலைநாட்டி, உலகம் பூராகவும் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை கொண்டாடி வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக் கிழமை மன்னார் மறைமாவட்டத் திலுள்ள அனைத்து பங்குகளிலும் சனிக்கிழமை நடுச்சாமம் மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிகள் இடம்பெற்றன.

இவற்றில் அனைத்து பங்குகளிலும் இறை மக்கள் பெருந்தொகையில் கலந்து கொண்டு திருப்பலிகளில் கலந்து கொண்டனர்.

ஞாயிற்றுக் கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து உயிர்த்த இயேசுவின் திருச்சுரூபம் ஆலயத்துக்கு வெளியே திருப்பவனி யாக எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனை யும் இடம்பெற்றது.

இரவு மற்றும் காலையில் மன்னார் மறைமாவட்ட ஆலயங்களில் நடை பெற்ற உயிர்த்த இயேசுவின் திருப்பலி கொண்டாட்டத்தின்போது ஆலயங்க ளைச் சுற்றி பொலிஸ் மற்றும் இராணுவ பாதகாப்புகளும் காணப்பட்டன.



# கதிர்காம உற்சவ திகதியில் மாற்றமா? விசனம் தெரிவிக்கின்றனர் இந்துக்கள்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழா உற்சவ திகதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று வெளியாகும் செய்தியால் அடியார்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

முன்னர் கதிர்காமக் கந்தன் ஆலயம் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜுலை 26 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெற இருந்தது.

தற்போது திகதி மாற்றத்தை அடுத்து 2025 கதிர்காம ஆடிவேல் விழா ஜுன் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஜுலை 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமக்கந்தனின் திருவிழா இடம்பெறும் திகதிகளில் திடீர் மாற்றம் இடம்பெற்றுள்ளதாக சேவற்கொடியோன் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வெளியாகிய பெரும்பாலான கலண்டர்களில் ஜுலை மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்த வருட பஞ்சாங்கத்தில் பிரபல ஆலயங்களின் உற்சவ திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் கதிர்காம ஆடிவேல் உற்சவ திகதி தொடர்பில் எதுவும் இல்லை.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கதிர்காமம் ஆலய நிர்வாகம் இக் குழப்பத்தை தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்து மக்கள் கோருகின்றனர்.

# கதிர்காம உற்சவ திகதியில் மாற்றத்தை அடுத்து யாழ்.- கதிர்காம யாத்திரை மே 1 இல் ஆரம்பம்!

## ஜெயா வேல்சாமி அறிவிப்பு



**(வி.ரி. சகாதேவராஜா)**

கதிர்காம உற்சவ திகதி மாற்றத்தை அடுத்து இலங்கையின் மிக நீண்ட யாழ்ப்பாணம் – கதிர்காமம் பாதயாத்திரை மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

கதிர்காமத்தின் வருடாந்த ஆடிவேல் விழா ஜுலை 26 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெற இருந்தது.

தற்போது திகதி மாற்றத்தை அடுத்து 2025 கதிர்காம ஆடிவேல் விழா உற்சவம் ஜுன் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஜுலை 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் ஜெயா வேல்சாமி தலைமையிலான மிக நீண்ட

தொடர்ச்சி▼

# கதிர்காம உற்சவ...

**தொடர்ச்சி▲**

59 நாள் பாதயாத்திரை ஜுன் மாதம் 26 ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையும்.அதற்கான முன் ஏற்பாடு ஒழுங்கு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள் எப்பட்டு வருகின்றன.

இந்தப் புனித பாதயாத்திரைக் குழுவில் பக்திபூர்வமான முறையில் பங்கு பெறவிரும்பும் அடியவர்கள் 0778386381, 0763084791 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.







# மன்னார் குளங்களின் கீழான சூழல் சம்பந்தமான கருத்தரங்கு

(வாஸ் கூஞ்ஞ)

உதவி ஆணையாளர் கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் என்பன இணைந்து மன்னார் குளங்களின் கீழ் சுற்றாடல் சூழல் சம்பந்தமான கருந்தரங்கு ஒன்றை நடத்தின.

மன்னார் கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையுடன் இடம்பெற்ற கருத்தரங்கில் குளங்களின் அருகிலுள்ள கிராமிய மட்ட அமைப்புகளில் இருந்து கலந்து கொண்ட தலா 03 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற செயற்றிட்டத்தின் கீழ்  இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதில் அரச பங்குதாரர்களாக கமநல சேவைகள் திணைக்களம் மன்னார் நகர சபை , மன்னார் பிரதேச செயலகம் போன்றவை கடந்த வருடத்தில் இருந்து ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கமநல சேவை திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வரும் குளங்களின் விவரங்களும் அதன் நடவடிக்கைகளும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மற்றும் யுஎன்டிபி ஆகிய நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுற்றாடல்  சூழல் சம்பந்தமான வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் மன்னார் பிரதேச செயலகத்தால் நகரத்தில் எடுக்கப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டமும் சுற்றுச் சூழல் பேணுதல் தொடர்பாகவும் பேசப்பட்டது.

மன்னார் நகர சபையால் திண்மக் கழிவுகள் அகற்றலும் சுற்றுச் சூழல் பேணுதலும் தொடர்பாகவும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதன் வளவாளராக மன்னார் கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கலிஸ்ரஸ் , தோட்டவெளி கமநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்  மிராண்டா மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் யுஎன்டிபி திட்ட அலுவலகர் சின்கிலேயர் பீற்றர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# ஜம்மு - காஷ்மீரில் திடீர் வெள்ளம்; மூவர் பலி, ஒருவரை காணவில்லை

ஜம்மு - காஷ்மீரின் ராம்பன் மாவட்டத்தில் நேற்றிரவு இரவு முழுவதும் பெய்த கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி மூவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மண்சரிவு மற்றும் ஆலங்கட்டி மழையுடன் கூடிய இந்த இயற்கை பேரழிவு சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியதுடன் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர்.

இடைவிடாத மழை காரணமாக அருகிலுள்ள நல்லாவி நீரோடையில் நீர்மட்டம் வியத்தகு முறையில் உயர்ந்து, செனாப் பாலத்திற்கு அருகிலுள்ள தரம்குண்ட் கிராமத்திற்குள் நுழைந்த திடீர் வெள்ளமாக மாறியதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால், பத்து வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன, மேலும் 25 முதல் 30 வீடுகள் பகுதியளவு சேதமடைந்தன.

அழிவு இருந்தபோதிலும், தரம்குண்ட் பொலிஸ் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் விரைவான நடவடிக்கை பாதிக்கப்பட்ட பகுதியில் சிக்கியிருந்த கிட்டத்தட்ட 90 முதல் 100 பேரை பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதி செய்தது.

வீடுகள், இடிந்து விழுந்த கட்டமைப்புகள் மற்றும் இடிபாடுகளால் சேதமடைந்த வாகனங்கள் வழியாக சேறு நிரம்பிய நீர் பாய்வதை வெள்ளம் தொடர்பில் வெளியான காட்சிகள் காண்பிக்கின்றன.

கிராமத்தின் பல பகுதிகளில் தண்ணீர் தொடர்ந்து உயர்ந்து வருவதால், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பல குடியிருப்பாளர்கள் மீட்புக் குழுவினரால் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதையும் காட்சிகள் காட்டுகின்றன.



# எலோன் மஸ்குடன் தொலைபேசியில் கலந்துரையாடினார் நரேந்திர மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், உலகின் மிகப்பெரும் செல்வந்தரான எலோன் மஸ்கிற்கும் இடையே தொலைபேசி வழியாக கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்காவுடன் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் நேரத்தில் இந்த தொலைபேசி உரையாடல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வோன்ஸ் நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ட்ரம்பின் கொள்கைக்கு எதிராக பல நகரங்களில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவில், வொஷிங்டன் உள்ளிட்ட பல நகரங்களில் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நாடுகடத்தல், பணியாளர்கள் பணிநீக்கம், காசா மற்றும் உ க்ரைன் போர்கள் தொடர்பான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


வெள்ளை மாளிகைக்கு வெளியேயும் பதாகைகளை ஏந்தியவாறு பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் நாடு கடத்திய அல்லது நாடு கடத்த முயற்சிக்கும் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பலர் கோசங்களை எழுப்பி வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.











# போர் நிறுத்தத்தை மீறி தாக்குதல் நடத்தும் ரஷ்யா: ஜெலென்ஸ்கி

உக்ரைன் போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்கும் அதேநேரம், ரஷ்யா அதனை மீறித் தாக்குதல் நடத்துவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முதல் இன்று நள்ளிரவு வரை உயிர்த்த ஞாயிறுக்கான போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

அதற்கமைய, உக்ரைனில் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்துமாறு தமது படைகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன், இந்த போர் நிறுத்தத்தில் எந்தவொரு சாத்தியமான மீறல்களுக்கும் பதிலளிக்க ரஷ்யப் படைகள் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அதேநேரம், முழுமையான மற்றும் நிபந்தனையற்ற 30 நாள்கள் அமைதி திட்டம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பதிலை ரஷ்யா வழங்க வேண்டும் என ஜெலென்ஸ்கி தமது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவின் குர்ஸ்க் மற்றும் பெல்கோரோட் பகுதிகளில் போர் தொடர்வதாகவும், ரஷ்ய ட்ரோன்கள் இன்னும் பயன்பாட்டில் இருப்பதாகவும், சில பகுதிகளில் போர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 20/04/2025

## கனடாவில் முன்கூட்டிய வாக்களிப்பில் சாதனை

கனடாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் முன்கூட்டிய வாக்களிப்பில் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தேர்தலின் முதல் நாளில் நடந்த முன்னோடி வாக்குப்

02



# தற்போது பொருளாதாரத்திற்கு ஆபத்தாக இருபவர் ட்ரம்ப்

## கனடா பிரதமர் மார்க் கார்னி விமர்சனம்

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பரஸ்பர வரிவிதிப்பு அமெரிக்கா மட்டுமின்றி, சர்வதேச அளவில் வணிகப் போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**இதற்கிடையே தற்போதைய சூழலில் பொருளாதாரத்திற்கு ஆபத்தாக இருப்பவர் ட்ரம்ப் தான் என்ற விமர்சனத்தை கனடா பிரதமர் மார்க் கார்னி முன்வைத்துள்ளார்.**

மேலும், ட்ரம்பின் செயற்பாடுகள் மீது கடுமையான விமர்சனங்களையும் அவர் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் ,

“இப்போது ட்ரம்ப் ஒரு வர்த்தகப் போரை ஆரம்பித்துள்ளார். இந்த வர்த்தகப் போரை எதிர்கொள்ளவும் கனடாவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மாகாணங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு முக்கியமானது.

வர்த்தகப் போரைப் பொறுத்தவரை அமெரிக்காவுக்குப் பதிலடி தரும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 60 பில்லியன் டொலருக்கு அதிகமான பொருள்களுக்கு கனடா பரஸ்பர வரியை விதித்துள்ளது. இந்த வர்த்தகப் போரில் நிச்சயம் பின்வாங்க மாட்டோம்.” என்றார்.

# பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணை துஷ்பிரயோகம் செய்த சிறுவன் கைது

நயாகரா பகுதியில், பஸ் ஒன்றில் பயணித்த பெண் ஒருவரை பாலியல் வன்முறை செய்தார் என 16 வயது சிறுவன் ஒருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில், நயாகரா பால்ஸ் பகுதியில் மோரிசன் தெருவும் டோர்ச்செஸ்டர் சாலையும் சந்திக்கும் பகுதியில் பெண் ஒருவர் பஸ்ஸில் ஏறியுள்ளார்.

பயணத்தின்போது, அவரை அடையாளம் தெரியாத ஆண் ஒருவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக நயாகரா பிராந்திய பொலிஸார் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

02





# மிசிசாகாவில் அமைந்துள்ள 7 பாடசாலைகள் மீது தாக்குதல்

கனடாவின் மிசிசாகாவில் அமைந்துள்ள 7 பாடசாலைகள் மீது இனவெறி மற்றும் பால்நிலை வெறுப்பு அடிப்படையிலான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மிசிசாகாவில் உள்ள 7 உயர்நிலை பாடசாலைகளில் வெறுப்புணர்வு அடிப்படையிலான கிராஃபிட்டிகள் வரையப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து நான்கு சந்தேகத்துக்குரியவர்களை பீல் பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஏப்ரல் 10 முதல் 18 ஆம் திகதி வரை இந்த சம்பவங்கள் நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கிராஃபிட்டி இனவெறி மற்றும் 2SLGBTQI+ சமூகங்களை குறிவைக்கும் வகையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏழு பாடசாலைகளிலும் இந்த சம்பவங்கள் இரவு நேரத்தில் நடந் துள்ளன என்றும், நான்கு பேர் இதில் தொடர்புடையவர்கள் என நம்பப்படுகிறது.

இந்த தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பஸ்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயிண்ட் கேத்தரின்ஸில் உள்ள வெல்லண்ட் அவென்யூவிலும் ஜெனீவா வீதியிலும் அருகே பஸ்ஸிலிருந்து இறங்கினார்.

அதே நிலையிலேயே குற்றம் சாட்டப்பட்ட சிறுவனும் இறங்கி வட மேற்கே ஓடிச் சென்றுள்ளார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

அன்று மாலை பொலிஸார் அந்த சிறுவனை கைது செய்துள்ளனர்.

குற்றம் சுமத்தப்பட்ட சிறுவனின் வயது 18க்கு குறைவாக இருப்பதால், 'இளைஞர் குற்றவியல் நீதிச் சட்டத்தின்' கீழ் அவரது அடையாளம் பாதுகாக்கப்படுகிறது.






## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவில் வரலாறு காணாத மக்கள் திரளாக வந்து வாகக்ளித்தனர்.

முதல் நாளான வெள்ளிக்கிழமை மட்டும் இரண்டு மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர் என்று தேர்தல் கனடா தெரிவித்துள்ளது.

இது 2021 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலை விடவும் வாக்குப்பதிவு ஆர்வம் அதிகமாக இருப்பதைக் காட்டுகிறது. முன்கூட்டிய வாக்குப்பதிவு ஏப்ரல் நீண்ட விடுமுறை நாள்களில் நடைபெறுகிறது,

ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலுக்கான ஒரே வாரத்திற்கு முன்பாக இந்த வாய்ப்பு முடிவடைகிறது. பொதுத் தேர்தலை முன்னிட்டு, லிபரல் கட்சியும், நியூடெமோக்ராட் கட்சியும் தங்களின் தொகுப்புசெய்யப்பட்ட வாக்குறுதி திட்டங்களை சனிக்கிழமை வெளியிட்டன.




லிபரல் தலைவர் மார்க் கார்னி ஒன்டாரியோவில், தனது முழு தேர்தல் திட்டங்களை வெளியிட்டார். இந்த திட்டத்தில் எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் 129 பில்லியன் டொலர் புதிய செலவுகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, வீடுகள் மற்றும் வர்த்தக உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதே இந்த திட்டத்தின் மைய நோக்கமாகும்.

NDP தலைவர் ஜக்மீத் சிங் ப்ரிட்டிஷ் கொலம்பியாவின் பார்னபியில் தனது திட்டத்தை வெளியிட்டார். பில்லியனர்கள் மீது புதிய செல்வவரி விதிப்பதன் மூலம் வரிவிதிப்பில் இருந்து ஆண்டுதோறும் 22 பில்லியன் டொலரை அரசுக்கு வசூலிக்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு செல்வந்தன் பங்கு விற்பனை செய்து சம்பாதிப்பதை விட, ஒரு தாதி, ஆசிரியர், தொழிலாளி அதிக வரி செலுத்த வேண்டிய நிலை இருக்கக் கூடாது," என்று சிங் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர், வாக்களிக்க விரும்புபவர்கள் ஏப்ரல் 22 வரை, தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை வாக்களிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் பட்டப்பகலில் துப்பாக்கி சூடு; குடியிருப்புக்கு தீ வைப்பு சம்பவங்கள்

## ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் ஃபோர்ட் செயின்ட் ஜோனில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு தீ சம்பவங்கள் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஃபோர்ட் செயின்ட் ஜோனில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கரமான தீ விபத்து ஆகியவற்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் சுமார் 1:20 மணியளவில், 103 அவென்யூவின் 9800 தொகுதியில் அமைந்துள்ள ஒரு அடுக்குமாடி கட்டடத்திற்கு வெளியே துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

முதற்கட்ட விசாரணையில், வாகனம் வந்த சந்தேக நபர், இரண்டு பேர் இருந்த கருப்பு நிற பிக்கப் டிரக் மீது துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார்.

அதிர்ஷ்டவசமாக டிரக்கில் பயணித்த இரண்டு பேரும் அங்கிருந்து தப்பிச் சென்று அருகிலுள்ள மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டனர்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மருத்துவமனை ஊழியர்கள் மருத்துவமனையை தற்காலிகமாக பூட்டி பாதுகாப்பு நெறிமுறைகளை செயல்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு வந்த பதிலளிப்பு சட்ட அமலாக்க அதிகாரிகள் அதிர்ச்சியூட்டும் காட்சியை எதிர்கொண்டனர்.

சம்பந்தப்பட்ட இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

விசாரணையின் ஆரம்ப கட்ட கண்டுபிடிப்புகளின் படி, துப்பாக்கிச் சூட்டிற்கு காரணமான அதே சந்தேக நபர் வேண்டுமென்றே கட்டடத்திற்கு தீ வைத்துவிட்டு, பின்னர் தனது வாகனத்தை நேரடியாக தீக்குள் செலுத்தியுள்ளார் என தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன், துப்பாக்கி சூடு நடத்திய நபரும் அந்த காருக்குள் இறந்து கிடந்துள்ளார்.

இதையடுத்து "இந்த கட்டத்தில், எங்கள் மதிப்பீடு இது ஒரு தனிமைப் படுத்தப்பட்ட சம்பவம் என்பதைக் குறிக்கிறது, மேலும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு தொடர்ந்து எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்," என்று பிரிட்டிஷ் கொலம்பியாதீவிர குற்றப்பிரிவின் பணியாளர் சார்ஜென்ட் கிரிஸ் கிளார்க் தெரிவித்துள்ளார்.





